


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly

*Free Circulation*




VOL - 3 ISSUE - 16 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com



# புனித அந்தோனியார் தொடக்கப்பள்ளியில் டான்சி நகர் நலவாழ்வு சங்கம் நடத்திய கொரோனா தடுப்பூசி முகாம்...



டான்சி நகர் நலவாழ்வு சங்கமும், சென்னை மாநகராட்சி சுகாதார துறையும் இணைந்து 28-03-2021 ஞாயிறு அன்று கொரோனா தடுப்பூசி முகாம் புனித அந்தோனியார் தொடக்கப்பள்ளியில் நடத்தப்பட்டன. நமது டான்சி நகர், வீனஸ்காலனி, அன்னை இந்திராநகர், ஆகிய நகர்களில் இருந்தும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வந்தார்கள்.

நமது டான்சி நகரில் உள்ள உறுப்பினர்கள் அல்லாதவர்களும் இந்த முகாமினால் பயண்பெற்றனர். தடுப்பூசி முகாமிற்கு மாநகராட்சி 13,வது மண்டல அலுவலர் உயர் திரு.திருமுருகன் அவர்களும் 13,வது மண்டல சுகாதார நல அலுவலர் டாக்டர். கோமதி அவர்களும் மற்றும் சுகாதார அதிகாரி வேளச்சேரி திரு.முருகேசன் அவர்களும் சுகாதார ஆய்வாளர் திரு.சுப்பரமணி அவர்களும் முகாமில் ஆய்வு செய்து தடுப்பூசி போட வந்தவர்களுக்கு அறிவுரை வழங்கி நலவாழ்வு சங்கத்தையும் பாராட்டினார்கள். 110, பேர் வரை தடுப்பூசி போட்டுக்கொண்டார்கள்.

தடுப்பூசி போட்டுகொள்ள வந்தவர்களுக்கு சேர், குடிநீர் ஏற்பாடு செய்யப்பட்டன. சுகாதார பணியாளர்கள் 7, பேருக்கு காலை சிற்றுண்டியும், பழசாரும், மதிய உணவும் வழங்கப்பட்டன. சங்கத்தின் தன்னார்வு குழு உறுப்பினர் திரு.தாமோதிரன் அவர்கள் 19,வது தெரு முகாமிற்கு வந்த அனைவருக்கும் உதவிகள் செய்து சிறப்பாக பணியாற்றினார்கள்.

அவர்களுக்கு நலவாழ்வு சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர். மற்றும் ஒத்துழைப்பு கொடுத்த சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர்.

முகாமிற்கு மட்டுமின்றி சங்கத்தால் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளுக்கும் பள்ளியை வழங்கி நலவாழ்வு சங்கத்திற்கு பேருதவிகள் புரிந்துவரும் புனித அந்தோனியார் மேல்நிலைபள்ளி தலைமை ஆசிரியை சகோதரி மரியஜோதி அவர்களுக்கும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை சகோதரி லூர்துஅமலி அவர்களுக்கும் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.


**To Advertise about Rental House, Land Sales & Job Vacancy Pay Rs. 350/- Only**

**Commercial Space for Rent**
650 Square feet for
23,000/- @ first floor
*Diya Complex,*
*Vijayanagar Main Road, Velachery*
*(Near Ananda Bhavan)*
6 month rent as advance
**CONTACT- 7305837388**

**Commercial Space for Rent**
850 Square feet for
27,000/- @ Ground floor
*Diya Complex,*
*Vijayanagar Main Road, Velachery*
*(Near Ananda Bhavan)*
2 L as advance
**CONTACT- 7305837388**

**TOLET RENT VELACHERY**
**350 Square feet, Rent 8,000/-**
**INDEPENDENT HOUSE**
*Working women 1or 2 Girls*
350 சதுர அடி குடோன் வாடகைக்கு (Purpose)
Provision Store
எண்ணெய் குடோன்
அரிசி குடோன்
மருந்து குடோன்
*(Tuition Centre, Office Rent Negotiable)*
**Contact- 7397354283**

**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
YOGA AEROBIC ZUMBA

| | |
|---|---|
| Yoga Pranayam Classes | Therapeutic Yoga Classes |
| Yoga Meditation Classes | Hatha Yoga Classes |
| Yoga Classes For Woman | Yoga Classes For Diabetes |
| Yoga Classes For Men | Corporate Yoga Consultants |
| Yoga Classes For Children | Yoga Classes For Weight Loss |

**Yoga Classes At Home**
Contact : 9444 122 922
***(Separate Classes for Ladies Teachers Available)***
**Branches :**
❖ Velachery ❖ Palvakkam (OMR) ❖ Navalur ❖ PTC





வருகின்ற 06.04.2021 அன்று நடைபெற இருக்கின்ற வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக திருவள்ளுவர் நகர், திருவான்மியூர் சென்னை - 41ல் வசிக்கும் உங்கள் சகோதரியான இயற்கை உழத்தி [பெண் விவசாயி] **N.மகாலட்சுமி**B.SC.,B.Ed., ஆகிய நான் பச்சைமிளகாய் சின்னத்தில் உங்களில் ஒருவராகவும் எனது குடும்பத்தில் முதல் பெண் வேட்பாளராகவும் போட்டியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உங்களுக்கு சேவை செய்வதற்காகவே முழுக்க முழுக்க உங்களை நம்பியே சுயேட்சையாக வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகின்றேன். உங்கள் வேட்பாளர் ஆகிய நான் மறைந்த இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் ஐயாவிடம் இயற்கை விவசாயத்தை கற்றுக்கொண்டு அவர் வழியில் கடந்த 20 வருடங்களாக இயற்கை விவசாயத்தை வெற்றிகரமாக செய்து கொண்டும், இந்தியா முழுவதும் படித்த முதல் தலைமுறை இயற்கை விவசாயிகளை உருவாக்கிக் கொண்டும், இயற்கை விவசாயிகளை தொழில் முனைவோர்களாக மாற்றிக் கொண்டும், மக்களுக்கு சமூக சேவை செய்து கொண்டும் இருக்கிறேன்.

எனது சேவையை பாராட்டி பல அமைப்புகள் பல விருதுகள் வழங்கி கௌரவப்படுத்தியுள்ளனர். இதன் அடிப்படையிலேயே உங்களுக்கு உங்களில் ஒருவராக உங்கள் சகோதரியாக சுயேட்சை வேட்பாளராக பச்சைமிளகாய் சின்னத்தில் போட்டியிடுகிறேன். எனவே உங்கள் பேராதரவை எனக்களிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

# யோகாசனம்

## திரிகோணாசனம்

**விளக்கம்:** முக்கோண வடிவம் உடையது.



**செய்முறை:** படத்தில் காட்டியுள்ளவாறு காலை அகற்றவும். இரு கைகள், தோள்பட்டை நேராக உயர்த்தி வலது புறம் சாய்ந்து வலது காலின் பெருவிரலை தொடவும் இதேபோல் இடது புறமும் செய்ய வேண்டும். 20 வினாடி மூச்சு இயல்பாக இருக்கவும்.

**பயன்கள்:** இடுப்பில் உள்ள சதையை குறைக்கும், மார்பு விரிவடையும், கழுத்து இறுக்கம் குறையும்


அருட்பெருஞ்ஜோதி தனிபெருங்கருணை

**YOGA CENTRE**
Cell : 9444 122 922



Cozy Bean Bags
Park yourself comfortably
VELACHERY • TARAMANI
ANNANAGAR • URAPAKKAM
LEADING BEAN BAG MANUFACTURER
Contact : 93839 78910 / 93822 18477

Nellai Machãnin
RUSIKKARAN™
RESTAURANT | CATERING SERVICE | VEG & NON VEG
37F | VELACHERY TO TAMBARAM MAIN ROAD | VIJAY NAGAR
VELACHERY | CHENNAI 600 042 | TN | MOBILE 759 825 6999
Email:rusikkaran@gmail.Com


## இந்த வார ராசிபலன்

**மேஷம்**
இந்த வாரம் உங்கள் தன்னம்பிக்கை மற்றும் உற்சாக நிலையில் நல்ல முன்னேற்றம் காண வாய்ப்புள்ளது. இந்த நேரத்தில் உங்கள் குடும்ப வாழ்க்கையும் மிக சிறப்பாக அமையும்.

**ரிஷபம்**
இந்த வாரம் குடும்பத்தில் மற்ற உறுப்பினர்கள் காரணத்தினால் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும், இதனால் குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை பாதிப்படையக்கூடும்.

**மிதுனம்**
இந்த வாரம் முழுவதும் உங்களுக்கு உடல் ஆரோக்கிய பிரச்சனைகள் உங்களை தொந்தரவு செய்யக்கூடும். இதனால் நீங்கள் உங்கள் மகிழ்ச்சியிலும் பின்தங்கி இருப்பீர்கள்.

**கடகம்**
இந்த வாரம் வியாபாரிகளுக்கு பணித் துறை தொடர்பாக வேறு மாநிலத்திற்கு செல்ல வேண்டியதாக இருக்கக்கூடும், அவர்களின் எதிர்பார்த்ததை விட அதிகமாக பணம் வீணாகக்கூடும்.

**சிம்மம்**
இந்த வாரம் உங்கள் உடல் நலம் தொடர்புடைய பல பிரச்சனைகள் வர வாய்ப்புள்ளது. இதனால் முழு மனதுடன் யோகா மற்றும் உடற்பயிற்சி தினசரி செய்வது நல்லது.

**கன்னி**
இந்த வாரம் உங்களுக்கு மிகவும் சிறப்பானதாக இருக்கும். முக்கியமாக இந்த வார தொடக்கத்தில் மிகவும் நன்றாக இருக்கும். மற்றும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

**துலாம்**
இந்த வாரம் உங்கள் பொருளாதார நிலை வலுவாக இருக்கும். செல்வம் பெற விரும்பினால், நீங்கள் உங்கள் மூத்தவர்களின் வழிகாட்டுதல் படி பணத்தை முதலீடு செய்யலாம்.

**விருச்சிகம்**
இந்த வாரம் உங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கிடைப்பதால், உங்கள் வீட்டின் வருமானம் ஆதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணக்கூடும்.

**தனுசு**
இந்த வாரம் உங்கள் தாயின் உடல் ஆரோக்கியம் மிக மோசமாக இருக்கும். அத்தகைய சூழ்நிலையில் நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு ஆதரவாக இருப்பீர்கள்.

**மகரம்**
இந்த வாரம் நீங்கள் சுயமாகவே புத்துணர்வான சூழ்நிலை உணரக் கூடும். இதனால் உங்கள் பொருளாதார நிலை பயனுடையதாக மற்றும் வலுவான நிலையில் இருக்கக்கூடும்.

**கும்பம்**
இந்த வாரம் நீங்கள் உங்கள் செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. இல்லையெனில் எதிர்காலத்தில் பொருளாதார பிரச்சனைகள் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

**மீனம்**
இந்த நேரத்தில் நீங்கள் உங்கள் பணத்தை சேமிப்பது கவனக்குறைவாக இருக்ககூடும். இதன் எதிர்மறையான விளைவு உங்கள் பொருளாதார இழப்பை ஏற்படுத்தக்கூடும்.

### சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் ₹ 4,268 | 1 கிராம் ₹ 4,656 |
| | 8 கிராம் ₹ 34,144 | 8 கிராம் ₹ 37,248 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 70.00 | |
| | 1 கிலோ ₹ 70,000 | |

## நமது சென்னை மாநகராட்சி (சுகாதாரத்துறை) மற்றும் வேளச்சேரி விஜயநகர் நலவாழ்வு சங்கமும் இணைந்து நடத்திய - கொரோனா தடுப்பூசி முகாம்...





நமது சென்னை மாநகராட்சி (சுகாதாரத்துறை) மற்றும் வேளச்சேரி விஜயநகர் நலவாழ்வு சங்கமும் இணைந்து கொரானா வைரஸ் தொற்றின் காரணமாக கோவக்சின் (covax - vaccine) தடுப்பூசியை, நம் நலவாழ்வு சங்கத்தின் மூலம் இலவசமாக தடுப்பூசி முகாம் ஒன்று நம் விஜய நகரில் நடத்தினர்.

இதில் 45 வயதுக்கு மேல் 59 வயதிற்குட்பட்ட பிற நோய் உள்ளவர்கள் மற்றும் 60 வயது மேற்பட்டவர்கள் யாவரும் இந்நோய் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசியைப் போட்டுக் கொண்டனர்.

தடுப்பூசியைப் போட்டுக் கொள்வதற்கு அனைவரும் தங்கள் பெயர், வயது, கைபேசி எண், ஆதார் எண், ஆகியவை மேற்கண்ட கைபேசி எண்ணுக்கு அனுப்பி பதிவு செய்து கொண்டனர். உறுப்பினர்கள் அனைவரும் ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுனர் உரிமம் போன்றவைகளிலிருந்து ஒன்றை கொண்டு வந்தனர்.







இத்தகைய மருத்துவ முகாம் அருமையான முறையில் அமைத்து மக்களின் பல சந்தேகங்களை போக்கி தடுப்பூசி போட்டு கொள்ள உதவிய தலைவர், செயலாளர், அரசு அதிகாரிகள் மற்றும் டாக்டர், ஹெல்த் சென்டர் ஊழியர்கள் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்தனர்.

வேளச்சேரி விஜயநகர் நலவாழ்வு சங்கமும் சென்னை மாநகராட்சி சுகாதாரதுறையும் இணைந்து நடத்திய தடுப்பூசி முகாம் மிக சிறப்பாக நடைபெற்றது. 139 நபர்கள் வந்து தடுப்பூசி போட்டுக் கொண்டார்கள். கார்பரேஷன் D.C ஐயா அவர்கள் பார்த்து விட்டு மிக அருமையாக ஏற்பாடு உள்ளது என்று பாராட்டினார். வேளச்சேரி விஜயநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக S.O.முருகேசன் ஐயா மற்றும் S.I. ராமதுரை அவர்களுக்கு நன்றியை தெரிவித்தனர்.

### சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்





| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹92.58 | ₹92.58 |

# Chutties Corner





## தனித்திறமை பகுதி





A.Akilan Anandhan
VI - std








B.A.Rajendra Prabhu
April - 03

## WANTED

**Hindi Teacher to Handle CBSE Curriculum**
**Send Your CV to**
**This Number 94449 10990**

**Contact: 94449 10990**




## வண்ணக்கோலம்





Devika Marimuthu
Thiruvanmiyur




# TODDLER FASHION WEEK 2021



TODDLER FASHION WEEK 2021 happened in marina mall on 7.03.2021 Organised by Prawin leroyz from l&i.19cc. Chennai OMR'S first kids fashion week entirely for designers. 25 kids, 45 adults, 10 Designers And 45 MUA are participants in this fashion week.

Jury:

Mrs. india Devanthi mam honoured all participants and make the show complete successfully.



வேளச்சேரி தொகுதியை மீட்டெடுக்க
கொரானாவிலிருந்து மீண்டுவரும்
Dr.Santhosh Babu IAS(Retd) அவர்களை வருக! வருக!! என்று வரவேற்கிறோம்
வேளச்சேரி தொகுதி
மக்கள் நீதி மய்யம்
நம்ம சின்னம்
டார்ச் லைட்
Ready
Ballot Unit
வரிசை எண்
9 ல்
வாக்களியுங்கள்
1
2
3
4
5
6
7
8
9
Dr.சந்தோஷ் பாபு IAS(Retd.)
Dr. Santhosh Babu IAS (Retd.)
தேர்தல் நாள் : 06.04.2021
நேர்மையை தேர்ந்தெடுத்து வாக்களிப்போம்.
மக்கள் நீதி மய்யம்
நாளை நமதே
# சீரமைப்பபோம் வேளச்சேரி
# வேளச்சேரிக்காக சந்தோஷ்பாபு

## வேளச்சேரி விஜய நகர் சிவ விஷ்ணு ஆலயத்தில் ஸ்ரீமுருகப் பெருமாள் மற்றும் ஸ்ரீராமர் - சீதை திருக்கல்யாண உற்சவம்...

**வே**ளச்சேரி விஜய நகர் சிவ விஷ்ணு ஆலயத்தில் பங்குனி உத்திரம் 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவன் சன்னதியில் மிக சிறப்பாக நடைபெற்றது.





பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரமும், பவுர்ணமியும் சேரும் நாள் நட்சத்திரத்தால் பவுர்ணமியின் பலன் கூடுதலாக அமையும் நாளாக அமைகின்றது. ஒவ்வொரு மாதத்திலும் பவுர்ணமி பல்வேறு சிறப்புகளை அளிக்கிறது. அதில் பங்குனி பவுர்ணமி குடும்ப ஒற்றுமையை உணர்த்தும் நாளாக அமைவதுடன், தமிழ் கடவுள் முருகனுக்கு விழா எடுக்கும் பங்குனி உத்திரம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

முருகப் பெருமானின் அவதார நோக்கமான சூரனை சம்ஹாரம் செய்ததற்கான பரிசாக இந்திரன் தன் மகள் தெய்வானையை முருகனுக்கு மணம் முடித்துத் தந்த நாள் பங்குனி உத்திரம்.

பங்குனி உத்திர விழாவின் முக்கிய நிகழ்வான ஸ்ரீமுருகப் பெருமாள் திருக்கல்யாண உற்சவம் சிவ விஷ்ணு ஆலயத்தில் கோலாகலமாக நடைபெற்றது.





இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று ஸ்ரீமுருகப் பெருமானை தரிசனம் செய்தனர்.

பங்குனி உத்திர நாளில் தான் முருக பெருமான் தெய்வானையை மணந்துள்ளார். சிவன் பார்வதி, ராமன் சீதை, தேவேந்திரன் இந்திராணி போன்றோர்களின் திருமண நாளாகவும் பங்குனி உத்திர நன்னாள் திகழ்கிறது.

பங்குனி உத்திர நன்னாளில் சிவ விஷ்ணு ஆலயத்தில் ஸ்ரீராமர் - சீதை திருக்கல்யாண உற்சவமும் மிக சிறப்பாக நடைபெற்றது.

இரண்டு சன்னதியிலும் பக்தர்களுக்கு பிரசாதம், மாங்கல்யகயிறு மற்றும் மஞ்சள் குங்குமம் வழங்கப்பட்டது.

## வாக்காளர் பட்டியலை மொபைலில் சரி பார்க்கலாம்..!


**வ**ரும் ஏப்ரல் 06, 2021 அன்று தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் வருகிறது. இதில் வாக்களிக்க தயாராக இருக்கும் வாக்காளப் பெருமக்களே நீங்கள் தேர்தலில் வாக்களிக்க விரும்பினால் வாக்காளர் அடையாள அட்டை இருந்தால் மட்டும் போதாது, வாக்காளர் பட்டியலிலும் உங்கள் பெயர் இருக்க வேண்டும்.

ஏனெனில் சில சமயம் வாக்காளர் பட்டியலில் சிலரது பெயர் விடுபட வாய்ப்புகள் உண்டு. அதனால் தான் உங்கள் பெயர் தேர்தலுக்கு முன் கூட்டியே வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்று சரி பார்க்க வேண்டியது அவசியமாகிறது. இதை தேர்தல் ஆணையம் வழங்கும் பல்வேறு வசதிகளை மூலமாக மிக எளிமையாக தெரிந்து கொள்ளலாம் அதாவது, வீட்டில் இருந்தபடியே வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறதா என்பதை எளிதாக கண்டறியலாம் லேப்டாப் மூலம் மொபைல் மூலம் என இரு வகைகளில் மிக எளிதாக கண்டறியலாம். முதல் வழியாக உங்களைப் பற்றிய தகவல்களை உள்ளீடு செய்வதன் மூலம் உங்கள் பெயர் இருக்கிறதா என அறிந்து கொள்ளலாம் அல்லது இரண்டாவது வழிமுறை வாக்காளர் அடையாள அட்டையில் இருக்கும் EPIC எண்ணைப் பதிவு செய்து தெரிந்துகொள்ளலாம். EPIC எண் இல்லையெனில் Step-1: தேசிய வாக்காளர் சேவைதளமான NVSP -யின் https://electoralsearch.in/ எலக்ட்ரோல் தேடல் பக்கத்துக்கு செல்லுங்கள்.

Step-2: அதில் Search your Name in Election Poll என்பதை கிளிக் செய்யவும். அல்லது அதில் உங்களின் பெயர், பாலினம், வயது, தொகுதி முதலிய தகவல்களை உள்ளீடு செய்ய வேண்டும். பின்னர் நீங்கள் captcha படத்திலிருக்கும் குறியீட்டை உள்ளிடவும். இறுதியாக Enter பட்டனை தட்டவும் EPIC எண் இருந்தால் Search by EPIC No என்பதை கிளிக் செய்யவும்.

Step-3: உங்கள் EPIC என்னை உள்ளிட வேண்டும். அதற்கு கீழே உள்ள மெனுவில் இருந்து மாநிலத்தை தேர்வு செய்து, captcha படத்தில் இருக்கும் குறியீட்டை உள்ளிடவும். பின்னர் தேடல் என்பதை கிளிக் செய்யவும்.

Step-4: உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்தால் தேடல் பட்டனை கீழே காணலாம். எதுவும் தெரியவில்லை என்றால், உங்கள் பெயர் வாக்களர் பட்டியலில் இல்லை என்று அர்த்தம்.







# *Entertainment Corner*

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | ■ | ■ | 4 |
| | ■ | | ■ | ■ | | ■ | ■ | |
| | ■ | 5 | | | | ■ | ■ | |
| | ■ | | ■ | ■ | 6 | | | |
| 7 | 8 | ■ | 9 | | | ■ | ■ | |
| ■ | 10 | | | ■ | | ■ | ■ | |
| ■ | | ■ | ■ | 11 | | 12 | 13 | |
| ■ | 14 | 15 | ■ | ■ | 16 | | | ■ |
| 17 | | | | | ■ | | ■ | ■ |

**மேலிருந்து கீழ்:**

1. நாட்டுப்புறப் பாட்டு வகை (5)
2. சுதந்திரம் வேண்டும் என்றால் விட்டுக் கொடு சிரத்தை (4)
3. இல்லற இன்பங்களை வள்ளுவர் கண்ணோட்டத்தில் பாவேந்தர் விளக்கிய காவியம்(4,4)
4. கரகாட்டக்காரன் நாயகி ஆடக் குறைந்த ஆடம்பரம் இளஞ்சிவப்பு மலரானது (7)
8. அவசரப் படாமல் நிதானமாக யோசித்தால் விடை கிடைக்கலாம் (5)
9. ஆடை- தகர்த்திடு (2)
12. பேரிளம்பெண்? (3)
13. வடமொழி சூரியன் (2)
15. உரை ____ பத்தினியை ' (சிலப்பதிகாரம்) (2)

**இடமிருந்து வலம்:**

1. வீதி முகவரி தெளிவாய்ப் புரிய ஒளிகொண்டு எடுத்துச் சொல் (2,4)
5. ஒரே வகையான அணுக்களைக் கொண்ட தனிப்பொருள் (4)
6. பயணத்தில் நேர்ந்த குழப்பத்தால் கேட்ட பொருளைக் கொடுத்தால் தான் வீடு வந்து சேர முடியும் (4)
7. பெறும் செல்வத்தை எல்லாம் பெரும் செல்வமாய்ப் போட்டு வை (2)
9. உன் தவிப்பு நீங்கித் தெளிவு பெற முதலில் தேவை கொஞ்சம் ஒத்தாசை (3)
10. வெடியைப் போட்டதால் நல்ல லாபம் (3)
11. விரைவாய் விரைவாய் அவசரம் (5)
14. வண்டிப் புகையைத் திரும்பிப் பார்த்த சாமா சந்தேகத்தில் கேட்ட கேள்வி (2)
16. ஆட்டுக்கல்லில் அமர்ந்த குழந்தை? (3)
17. ஈயடிச்சான் காப்பி அடி (3,2)

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Marketing Executive & Journalist : M.C. Rajan
Designer : S. Aswini

எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம் எக்ஸ்பிரஸ் வேளச்சேரி
This is only concern of express velachery

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

## தமிழோடு விளையாடு!

### வார்த்தை தேடு

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 15 கால நிலைகளின் பெயர்களை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மா | ரி | கா | ல | ம் | ழை | ம | வ | ரு | ப |
| சொ | ர் | ண | வா | ரி | பா | ம் | ச | ன் | மு |
| து | ர் | வ | கா | ல | ம் | ஊ | ஈ | ஆ | கா |
| வ | ர | ண் | ட | கா | ல | ம் | இ | வா | ல |
| ற் | ர் | பி | சா | ண | ம் | ம் | ம் | னி | நி |
| னி | ளி | ம் | ர் | ம் | ம் | ல | ல | லை | லை |
| வே | கு | ப | தி | த | ல | கா | கா | எ | எ |
| ள | ஒ | ப் | யு | ந் | கா | வ | வ | ஏ | ஐ |
| இ | ஔ | வெ | லை | ச | டை | ரு | ரு | ஈ | ஔ |
| இ | இ | இ | இ | வ | கோ | ப | ப | ஆ | ஐ |

சென்ற வார வார்த்தை தேடு விளையாட்டிற்க்கான விடைகள்
15 மலைகளின் பெயர்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஔ | மே | ல | கி | ரி | ஈ | ஔ | ஈ | உ | ச |
| ஒ | ஐ | ப | பொ | ஹா | நா | ஓ | உ | உ | வ் |
| ஏ | போ | ர் | தி | த் | ழி | இ | லை | ஊ | வா |
| யா | தை | வ | ய | தீ | ம | ஊ | ம | ஓ | து |
| னை | ம | த | ம் | ப | லை | லை | ள | ரி | ம |
| ம | லை | ம | எ | ர் | ம | லை | வ | கி | லை |
| லை | அ | லை | ஈ | க | அ | ம | ப | ர | நீ |
| ஏ | இ | ஆ | மே | எ | ஈ | சை | எ | து | ல |
| கொ | ல் | லி | ம | லை | ஔ | ச் | ஓ | ச | ம |
| தோ | ன் | றி | ம | லை | அ | ப | ஈ | ஔ | லை |

**சென்ற வார குறுக்கெழுத்து விளையாட்டிற்கான விடைகள்**

இடமிருந்து வலம்:
1. தொடுவான் 3. மைதா 7. நூற்றுக்கு நூறு 9. திலகம் 10. உகவை 11. தம்பட்டம் 12. மாசி 15. பாசறை

மேலிருந்து கீழ்:
1. தொகைநூல் 2. வாலறுந்த பட்டம் 4. தாரகை 5. தொகுதி உடன்பாடு 6. மருக வை 8. நூலகம் 11. தளபதி 13. சிறுவாணி 14. நிறை

**இணைச் சொற்களை கண்டுபிடியுங்கள்**

அவசரம்

__________ __________ __________ __________

சடுதி | நிதானம் | தாமதம்
முடுகல் | விரைவு | வேகம்

## அறுசுவை சமையல்

### பீர்க்கங்காய் கடைசல்

தேவையான பொருள்கள்:

பீர்க்கங்காய்- 1/2 கிலோ
சின்ன வெங்காயம் - 150 கிராம்
தக்காளி - 4
பச்சைமிளகாய் - 10
எண்ணெய் - 2 ஸ்பூன்.
கருவெப்பிலை - தேவையான அளவு
கடுகு - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு.

செய்முறை:

❖ பீர்க்கங்காய், சின்ன வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் அனைத்தையும் பொடியாக நறுக்கி கொள்ளவும்.

❖ பின்பு நறுக்கிய அனைத்தையும் ஒரு சட்டியில் போட்டு தேவையான அளவு தண்ணீர், உப்பு சேர்த்து நன்கு வேக வைத்து பின்னர் நன்கு கடைய வேண்டும்.

❖ பின்பு கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, கருவேப்பிலை போட்டு தாளித்து வேகவைத்த பீர்க்கங்காயில் கொட்டி கிளரினால் சுவையான பீர்க்கங்காய் கடைசல் ரெடி.

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்..........



செவிலியர் : "டாக்டர் 6-ம் நம்பர் பேஷண்ட்டுக்கு பண்ணவேண்டிய ஆபரேஷனை 9-ம் நம்பர் பேஷண்ட்டுக்கு பண்ணிட்டீங்க"

மருத்துவர் : "அப்படியா சரி பேஷண்ட் திருப்பி படுக்க வச்சுடுங்க"

******

நோயாளி : டாக்டர் உங்ககிட்ட ஒன்னு சொல்லனும்.

மருத்துவர் : என்ன சொல்லனும் சொல்லுங்க...

நோயாளி : சொல்ல பயமா இருக்கு டாக்டர்...

மருத்துவர் : "பயப்படாதிங்க டாக்டரிடம் உண்மையைத்தான் சொல்லவேண்டும்!"

நோயாளி : "உண்மையைச் சொல்லிவிடுகிறேன் டாக்டர்.... கடந்த 3 மாதங்களாக உங்களுக்கு கொடுத்த பீஸ் கள்ளநோட்டு, டாக்டர்... சாரி... "

******

## விடுகதை விளையாட்டு

1. சரி என்றாலும் அழிப்பான் தவறு என்றாலும் அழிப்பான் - அவன் யார்?
2. ஒளி கொடுத்து அழைப்பான் உரையாடலில் துளைப்பான் - அவன் யார்?
3. ஆட்டிவிட்டால் ஆடுவான் ஆடாவிட்டாலும் தொங்குவான் - அவன் யார்?
4. மண்ணெடுத்து கூடுகட்டும் மரம் அழித்து உயிர் வாழும் - அவன் யார்?
5. சிதறிக் கிடக்கிறது புள்ளிகள் சித்திரம் வரைய ஆளில்லை - அது என்ன?

**சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்**

1. தீக்குச்சி 2. பூசணிக்காய் 3. புடலங்காய் 4. கடிகாரம் 5. மயில்

## சுடோக்கு விளையாட்டு

**கட்டத்தில் உள்ள எண்களுக்கு ஏற்ப சரியான விடையை கண்டுபிடியுங்கள்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 6 | 5 | | 2 | 8 | | 9 |
| | | | | 4 | | | 3 | |
| | | | | | | | | 5 |
| 6 | | | 8 | | | 1 | | |
| 5 | | | | 7 | | | 8 | |
| 3 | | 2 | 9 | | 4 | | 6 | |
| | 2 | | 6 | | | | | 1 |
| | | | | 5 | 3 | 9 | 4 | |
| 8 | 3 | | | 9 | | | | 2 |

***சென்ற வார சுடோக்கு விளையாட்டிற்கான விடை***

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 4 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 |
| 6 | 7 | 2 | 1 | 9 | 5 | 3 | 4 | 8 |
| 1 | 9 | 8 | 3 | 4 | 2 | 5 | 6 | 7 |
| 8 | 5 | 9 | 7 | 6 | 1 | 4 | 2 | 3 |
| 4 | 2 | 6 | 8 | 5 | 3 | 7 | 9 | 1 |
| 7 | 1 | 3 | 9 | 2 | 4 | 8 | 5 | 6 |
| 9 | 6 | 1 | 5 | 3 | 7 | 2 | 8 | 4 |
| 2 | 8 | 7 | 4 | 1 | 9 | 6 | 3 | 5 |
| 3 | 4 | 5 | 2 | 8 | 6 | 1 | 7 | 9 |

TNBIL04133 R.Dis.No.1845/2014



## 2021 தி.மு.க தேர்தல் அறிக்கைகளில் சிறுதுளிகள்

- ஆட்டோ ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாங்க ரூ.10,000 மானியம் வழங்கப்படும்
- சமையல் எரிவாயு சிலிண்டருக்கு மானியமாக ரூ.100 மானியம் வழங்கப்படும்
- மாதம் ஒருமுறை மின் கட்டணம் செலுத்தும் முறை அமல்படுத்தப்படும்
- கொரோனா நிவாரணம் தொகையாக ரூ. 4000 வழங்கப்படும்
- ரேஷனில் உளுத்தம் பருப்பு மற்றும் கூடுதலாக ஒரு கிலோ சர்க்கரை வழங்கப்படும்
- பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.5.00 டீசலுக்கு விலை ரூ.4.00 குறைக்கப்படும்
- ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3.00 குறைக்கப்படும்
- மகளிர் பேறுகால உதவித்தொகை 24,000 ரூபாயாக உயர்த்தப்படும்
- சத்துணவு திட்டத்தில் காலையில் மாணவர்களுக்கு பால் வழங்கப்படும்
- உள்ளூர் நகர பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம்
- அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவச டேட்டாவுடன் TAB வழங்கப்படும்
- சென்னை மாநகரை வெள்ளச் சேதாரத்திலிருந்து காக்க வெள்ள மேலாண்மை குழு அமைக்கப்படும்
- ஆட்சேபனை இல்லா குடியிருப்புகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்படும்
- அடையார் ஆற்றின் கரையோரப் பகுதி வாழ் மக்களின் பாதுகாப்பை கருதி தடுப்பு சுவர் கட்டித்தரப்படும்
- 50 வருடங்களாக இருக்கும் மழை நீர் சேகரிப்பு கால்வாய்கள் நவீனப்படுத்தப்படும்
- அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மக்கள் குறைதீர்க்கும் முகாம்கள் நடத்தப்படும்
- NEET தேர்வை ரத்து செய்யும் சட்டம் அமல்படுத்தப்படும்
- மகளிர் சுய உதவிக்குழு கடன்கள் ரத்து செய்யப்படும்
- முதியோர் உதவித்தொகை 1500 ரூபாயாக வழங்கப்படும்
- குடும்ப பெண்களுக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்படும்

## 2021 வேளச்சேரி சட்டமன்ற தொகுதி தி.மு.கவின் தேர்தல் அறிக்கைகள்

1. வேளச்சேரி காந்தி சாலையில் உள்ள IIT கிருஷ்ணா கேட் மீண்டும் திறக்கவும்.
2. வேளச்சேரி சேவா நகர் மகப்பேறு மருத்துவமனையை மீண்டும் கொண்டு வரவும்.
3. தண்டீஸ்வரம் 3வது மெயின் ரோட்டில் நிரந்தர விளையாட்டு திடல் அமைத்திடவும்.
4. வேளச்சேரியில் நீண்டகாலமாக வசிக்கும் தகுதியுடைய மக்கள்அனைவருக்கும் பட்டா வழங்கிடவும்.
5. வேளச்சேரி காந்தி சாலையில் உள்ள காலி இடத்தில் விளையாட்டுத் திடல் அமைத்திடவும்.
6. மேலும் பல்வேறு அடிப்படை வசதிகளும், மேம்பாட்டு பணிகளும் செய்வனே நடைபெற!

தளபதி ஆசிபெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேளச்சேரி சட்டமன்ற தொகுதி வேட்பாளர்.

**Dr.JMH.** ஹஸன் மௌலானா **MBA., LLB.,(HONS), HR&IP (IIT)** அவர்களுக்கு கை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

பொ.த.மதிவாணன்.,MBA, LLB...
செயலாளர்
179 ஆவது வட்ட தி.மு.க




W 109/3, Third Avenue, Anna Nagar (Roundtana), Chennai - 600 040.
Phone : 044 - 26208142

No.109, Sankaran Avenue, 100 Feet By Pass Road, (Opp) Anjappar Hotel, Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 4359 4393

Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH